நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**சோயா உணவுகள் தயாரிப்புப் பயிற்சி**

First Published : 12 Oct 2010 03:59:23 AM IST

சென்னை, அக். 11: தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் சார்பில் சோயா உணவுகள் தயாரிப்பு குறித்த ஒரு நாள் பயிற்சி வியாழக்கிழமை (அக்.14) நடைபெறவுள்ளது.

சோயா உருண்டைகள், பொடிமாஸ், பாயாசம், செட்டிநாடு டோபு, மஞ்சூரியன் உள்ளிட்ட உணவுப் பண்டங்கள் தயாரிக்க இதில் பயிற்சியளிக்கப்படும்.

ஆர்வமுள்ள அனைவரும் பயிற்சியில் பங்கேற்கலாம். பயிற்சியில் பங்குபெற விருப்பமுள்ளவர்கள் தங்கள் பெயரை முன்பதிவு செய்து கொள்ள வேண்டும்.

மேலும் விவரங்களுக்கு: நகர்ப்புற தோட்டக்கலை வளர்ச்சி மையம், 44, 6-வது அவென்யு, அண்ணாநகர், சென்னை-40. தொலைபேசி: 044-2626 3484, 4217 0506.

**டிசம்பர் மாதம் முதல் தென்னை நார்க் கழிவு தொழில்சாலை இயங்கும்**

First Published : 11 Oct 2010 02:59:03 PM IST

தஞ்சாவூர், அக். 10: தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டையில் வரும் டிசம்பர் மாதம் முதல் தென்னை நார்க்கழிவு பதப்படுத்தும் தொழிற்சாலை இயங்கும் வகையில் பணிகள் நடைபெற்று வருகின்றன என்றார் மாவட்ட ஆட்சியர் எம்.எஸ். சண்முகம்.

தஞ்சையில் சனிக்கிழமை இந்த தொழிற்சாலை அமைக்கும் பணிகள் குறித்து நடை பெற்ற ஆலோசனைக் கூட்டத்துக்கு தலைமை வகித்து அவர் மேலும் பேசியது:

தென்னை விவசாயிகள் நலனுக்காகவும், மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்காகவும் பழவேற்காடு கிராமத்தில் தென்னை நார்க்கழிவு பதப்படுத்தும் தொழிற்சாலை 5.8 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ 56 லட்சத்தில் அமைப்பட்டு வருகிறது.

இங்கு தயாரிக்கப்படும் தென்னை நார்க் கட்டிகளுக்கு கொரியா, சீனா, ஐரோப்பிய நாடுகளில் நல்ல வரவேற்பு உள்ளது. பழவேற்காடு கிராமத்தில் 50-க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

தொழிற்சாலை கட்டுமானப் பணிகள் திட்டமிட்டபடி நடைபெற்று வருவதால் வரும் டிசம்பர் மாதத்திலிருந்து தொழில்சாலை செயல்படும் வகையில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

தொழிற்சாலை இயக்கத்துக்கு வரும் போது தென்னை விவசாயிகள் தங்களது தென்னை நார்க் கழிவுகளை இத் தொழில்சாலையில் பதப்படுத்தி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யலாம் என்றார் சண்முகம்.

**வேளாண் உபகரணங்கள் கண்காட்சி**

First Published : 11 Oct 2010 03:15:04 PM IST

திருவண்ணாமலை, அக். 10:திருவணணாமலை எஸ்.கே.பி. பொறியியல் கல்லூரி இயந்திரவியல் துறை சார்பில் வேளாண் உபகரணங்கள் கண்காட்சி சனிக்கிழமை துவங்கியது.

கல்லூரிச் செயலர் ஆர்.குப்புசாமி கண்காட்சியை தொடங்கிவைத்தார்(படம்). கரும்பு வெட்டும் இயந்திரம், நவீன சொட்டு நீர்ப்பாசனம், பூச்சிமருந்து தெளிக்கும் இயந்திரம், நாற்று நடும் இயந்திரம் என பல்வேறு உபகரணங்கள் கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்தன. மேலும் இயந்திரவியல் துறை மாணவர்களின் படைப்புகளும் இடம்பெற்றிருந்தன.

குறைந்த செலவில் அதிகத்திறன் கொண்ட காரை மாணவர்கள் பாலாஜி மனோஜ், வினோத்குமார் ஆகியோர் இயக்கிக் காண்பித்தனர். கல்லூரி தலைவர் கு.கருணாநிதி, தலைமை தாங்கினார். முதல்வர் எஸ்.பாலசுப்பிரமணியன் மற்றும் பேராசிரியர்கள், மாணவர்கள் உள்பட பலர் பங்கேற்றனர்.

**மரக்கன்றுகள் வழங்கும் விழா**

First Published : 11 Oct 2010 03:12:30 PM IST

வந்தவாசி, அக். 10: வந்தவாசியை அடுத்த காரணை கிராமத்தில் பாட்டாளி இளைஞர் சங்கத்தின் 5-ம் ஆண்டு துவக்கத்தையொட்டி மரக்கன்றுகள் வழங்கும் விழா மற்றும்

காரணை ஊராட்சி மன்ற நிர்வாகிகளுக்கு பாராட்டு விழா ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

கிராம நாட்டாண்மைதாரர் செ.செல்ல கவுண்டர் தலைமை வகித்தார். காரணை ஊராட்சித் தலைவர் சுந்தரி கணேசன், துணைத்தலைவர் ஜெயந்தி சம்பத் ஆகியோரை பாராட்டி பாமக மாவட்டச் செயலாளர் அ.கணேஷ்குமார் பாராட்டி சால்வை அணிவித்தார்.

வந்தவாசி நகர்மன்றத் தலைவர் க.சீனுவாசன், கிரீன்லேண்டு பவுண்டேஷன் மேலாண்மை இயக்குநர் அக்ரி.கனகராஜ், வன்னியர் சங்க மாநில துணைத்தலைவர் ப.மச்சேந்திரன், ஒன்றிய செயலாளர் மண்ணு உள்பட பலர் பங்கேற்றனர். விழாவில் பொதுமக்களுக்கு 500 மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

தினமலர்

**"ராஜராஜன் 1,000' நெல் சாகுபடி செயல் விளக்கம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 12,2010,02:22 IST

நாமக்கல்: நாமக்கல் வட்டாரத்தில் வேட்டையகவுண்டம்புதூர் கிராமத்தில், "ராஜராஜன் 1,000' தொழில் நுட்பத்தில் நெல் சாகுபடி குறித்து செயல்விளக்கம் அளிக்கப்பட்டது.விவசாயி பயனியாண்டி தோட்டத்தில் நடந்த செயல்விளக்க முகாமுக்கு, மாவட்ட வேளாண் இணை இயக்குனர் சிவராஜ் தலைமை வகித்தார். வட்டார வேளாண் உதவி இயக்குனர் பேபிகலா வரவேற்றார். யூனியன் சேர்மன் ராணி துவக்கி வைத்தார். ராஜராஜன் 1,000 நெல் சாகுபடி குறித்த தொழில் நுட்பங்களை துணை வேளாண் இயக்குனர்கள் பிரபாகரன், நடராஜனும் எடுத்துரைத்தனர்.

மேலும், தரமான விதை உபயோகித்தல் பற்றி விதை சான்று உதவி இயக்குனர் சுப்ரமணியம், உயிர் உரம் மற்றும் நுண்ணூட்ட சத்துக்கள் உபயோகம் குறித்து வேளாண் உதவி இயக்குனர் துரைசாமி ஆகியோர் விளக்கினர்.நாமக்கல் ஆத்மா திட்டத்தின் மூலம்,

நவீன தொழில் நுட்பங்களுக்கு தேவைப்படும் கருவிகள் பற்றிய செயல்விளக்கம் காண்பிக்கப்பட்டது. சுற்று வட்டராத்தை சேர்ந்த 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர்.நிகழ்ச்சியில், உதவி விதை அலுவலர் சேகர், உதவி வேளாண் அலுவலர்கள் ராதாகிருஷ்ணன், கண்ணன், உழவர் பயிற்சி நிலைய வேளாண் உதவி அலுவலர் அன்புச்செல்வி உள்பட பலர் பங்கேற்றனர்.

**விதை உரம் பெற அழைப்பு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 11,2010,23:24 IST

பொங்கலூர் : "விவசாயிகள், பொங்கலூர் வேளாண் விரிவாக்க மையத்தில் இருப்பு வைத் துள்ள இடுபொருட்களை பெற்றுக் கொள்ளலாம்,' என, உதவி இயக்குனர் (பொறுப்பு) மனோஜ்குமார் தெரிவித்துள்ளார்.நடப்பு பருவத்தில் விதைப்பதற்கு தேவையான உளுந்து வம்பன்-3 மற்றும் ஏ.டி.டி., 5, தட்டைப்பயறு - கோ (சி.பி.)-7, சூரியகாந்தி-கோ 4, சோளம்-கோ (எஸ்)-28 மற்றும் தென்னை மரங் களுக்கான நுண்ணூட்ட உரம் இருப்பில் உள்ளன. தேவைப்படும் விவசாயி கள், வேளாண் விரிவாக்க மையத்தை அணுகலாம் என்று தெரிவித்துள்ளார்.

**வாழைக்காய்வரத்து அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 11,2010,23:23 IST

அவிநாசி : அவிநாசியில் நேற்று நடந்த வாழைக்காய் ஏலத் துக்கு, கடந்த வாரத்தை விட வரத்து அதிகரித்திருந்தது.அவிநாசி வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று நடந்த வாழைக்காய் ஏலத்துக்கு 7,200 தார் வரத்தாக இருந்தது. இது, கடந்த வாரத்தைவிட 1,500 தார் அதிகம். இந்த வார ஏலத்தில் நேந்திரன் ரக வாழை கிலோவுக்கு ரூ.19 முதல் ரூ.23 வரைக்கும், கதலி ரக வாழை கிலோவுக்கு ரூ.8 முதல் ரூ.10 வரைக்கும் ஏலத்தில் எடுக்கப்பட்டது. சங்க தனி அலுவலர் பழனிசாமி கூறுகையில்,

""அவிநாசி, சேவூர், அன் னூர் மற்றும் குன்னத்தூர் வட்டாரத்தை சேர்ந்த விவ சாயிகள் பயனடைந்தனர். ஐந்து லட்சம் ரூபாய்க்கு வர்த்தகம் நடந்தது. தற் போது வாழைக்காய் அறு வடை சீசன் துவங்கியுள்ள தால் அடுத்த வாரம் முதல் வரத்து அதிகரிக்கும் வாய்ப்புள்ளது," என்றார்.

**கோவை, திருப்பூரில் கொப்பரை கொள்முதல் மையங்கள்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 11,2010,23:19 IST

பொள்ளாச்சி : வெளிமார்க்கெட்டில் கொப்பரை விலை கிடுகிடுவென உயர்ந்து வருவதால், அரசு கொள்முதல் மையங்கள் விவசாயிகளின் வருகையின்றி வெறிச்சோடி காணப்படுகின்றன. வெளிமார்க்கெட் நிலவரத்திற்கு ஏற்ப ஆதரவு விலையை அதிகரிக்க விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர்.தென்மாநிலங்களில் அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நீண்ட கால பயிரான தென்னை விவசாயிகளை பாதுகாக்கவும், தேங்காய் சார்ந்த பொருட்களின் விலை வீழ்ச்சியை தடுக்கவும் மத்திய அரசு கொப்பரைக்கு ஆதரவு விலை நிர்ணயம் செய்து கொள்முதல் செய்கிறது.மத்திய அரசின் "நேபட்' நிறுவனத்தின் மூலம், மாநில அரசின் "டான்பேட்' நிறுவனம் கூட்டுறவு சங்கங்கள் மூலம் கொப்பரை கொள்முதல் செய்கிறது. நடப்பு ஆண்டில் கொப்பரை கிலோவுக்கு 44.50 ரூபாய் ஆதரவு விலையாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

கோவை, திருப்பூர் மாவட்டத்தில் பொள்ளாச்சி, உடுமலை, பல்லடம், தாராபுரம், செஞ்சேரி, பொங்கலூர், சூலூர், தெலுங்குபாளையம்  போன்ற மையங்களிலும், அதனை சார்ந்த துணை மையங்களிலும் கொப்பரை கொள்முதல் செய்யப்படுகிறது.வேளாண் துறை மூலம் அடையாள அட்டை பெற்றுள்ள விவசாயிகளிடம் முன்பதிவு அடிப்படையில் கொப்பரை கொள்முதல் செய்யப்பட்டு, அரசு சேமிப்பு கிடங்கு நிறுவனத்தில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. கொப்பரை உற்பத்தி செய்யும் விவசாயிகள் சிலர், அரசு கொள்முதல் மையத்தில் வர்த்தகம் செய்தனர். கொப்பரை வியாபாரிகள்,  இடைத்தரகர்கள், கொள்முதல் மைய அதிகாரிகள் கூட்டு சேர்ந்து விவசாயிகளின் பெயரில் முறைகேடாக கொப்பரை வர்த்தகம் செய்தனர். இதனால், நேரடி தேங்காய் கொள்முதல் துவங்க வேண்டும் என்று விவசாயிகள் அரசை வலியுறுத்தி வருகின்றனர்.இந்நிலையில்

வெளிமார்க்கெட்டில் கொப்பரை விலை உயர்ந்து வருகிறது. கடந்த ஆகஸ்ட் மாதம் இறுதியில் வெளிமார்க்கெட்டில் ஒரு கிலோ கொப்பரை 40 ரூபாயை தொட்டது.

இதனால் விவசாயிகள் அரசு கொள்முதல் மையத்திற்கு செல்வதை தவிர்த்து வெளிமார்க்கெட்டில் வர்த்தகம் செய்ய துவங்கினர். செப்., மாதம் கொப்பரை விலை கிலோ 45 ரூபாயை தொட்டதால் அரசு கொள்முதல் மையங்களில் வர்த்தகம் தடைபட்டு வெறிச்சோடி காணப்படுகின்றன.விவசாயிகள் கூறுகையில், "அரசு கொள்முதல் மையத்தில் கொப்பரை வர்த்தகம் செய்தால் லோடிங், பேக்கிங் கட்டணம் தனியாக கொடுக்க வேண்டியுள்ளது. வர்த்தகம் செய்தால் அதிகாரிகள் பணம் பட்டுவாடா செய்ய 40 நாட்களுக்கு மேலாகிறது. வெளிமார்க்கெட்டில் வியாபாரிகளிடம் கொப்பரை வர்த்தகம் செய்தால் உடனடியாக பணம் கிடைக்கிறது. வெளிமார்க்கெட்டில் விலை உயர்ந்துள்ளதால் அரசு கொள்முதல் மையத்திற்கு கொப்பரை கொண்டு செல்வதில்லை. வெளிமார்க்கெட் நிலவரத்திற்கு ஏற்ப ஆதரவு விலையை கிலோவுக்கு 60 ரூபாய் என்று உயர்த்த வேண்டும்' என்றனர்.

"டான்பேட்' அதிகாரிகள் கூறியதாவது: கோவை, திருப்பூர் மாவட்டத்தில் மொத்தம் 14 மையங்களில் கொப்பரை கொள்முதல் செய்யப்படுகிறது. கடந்த செப்., 3ம் தேதி வரையிலும் 5,356 டன் கொப்பரை கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு 23.83 கோடி ரூபாய் பணம் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. வெளிமார்க்கெட்டில் கொப்பரை விலை உயர்ந்துள்ளதால் அரசு மையங்களில் செப்., முதல் வர்த்தகம் நடக்கவில்லை. விவசாயிகளிடம் கொள்முதல் செய்து, அரசு சேமிப்பு கிடங்கு நிறுவனங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ள கொப்பரையை "நேபட்' நிறுவனம் ஏலம் விடத்துவங்கியுள்ளது. வெளிமார்க்கெட்டில் கிராக்கி நிலவுவதால் இருப்பில் உள்ள கொப்பரையை விற்பனை செய்து குடோன்கள் காலி செய்யப்படுகின்றன என்றனர்.

**"பசுமைக் குடில் விவசாயிகள் நலன் காக்கும் நடவடிக்கை'**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 11,2010,23:03 IST

குன்னூர் : ""மாநிலத்தில் உள்ள பசுமைக் குடில் விவசாயிகள் நலன் காக்கும் நடவடிக்கைகளில் கவனம் செலுத்தப்படும்," என, தமிழ்நாடு பசுமைக் குடில் விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர் தெரிவித்துள்ளார்.தமிழ்நாடு பசுமைக் குடில் விவசாயிகள் சங்கத்தின் மாநிலத் தலைவராக, குன்னூர் இளித்துரை பகுதியை சேர்ந்த விஸ்வநாதன் தேர்வு செய்யப்பட்டுள்ளார்; இவர், நீலகிரி மாவட்ட சிறு மலர் சாகுபடியாளர்கள் சங்கத் தலைவராகவும் உள்ளார். அவர் கூறுகையில், ""தரமற்ற நாற்று உட்பட சில தொழிற்நுட்பப் பிரச்னையால், மாநில அளவில் பசுமைக் குடில் விவசாயம் நலிவடைந்துள்ளது; இதை மேம்படுத்த, மாநில அளவில் உள்ள விவசாயிகளை ஒருங்கிணைத்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்; விவசாயிகள் நலன் காக்கும் பணிக்கு, முழு நேரத்தை செலவிட உள்ளேன்," என்றார்

**செவட்டை பூச்சி தாக்குதலில் வெற்றிலை விவசாயம் பாதிப்பு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 12,2010,01:51 IST

வேலாயுதம்பாளையம்: செவட்டை கல்லிப்பூச்சி தாக்குதலில் புகளூர் சுற்றுப்பகுதி வெற்றிலை காய்ந்து சருகாவதுடன், சுருண்டு சிறுத்துபோவதாக விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.வேலாயுதம்பாளையம் புகளூர் சுற்றுப்பகுதியில் 5,000 ஏக்கருக்கு மேல் வெற்றிலை பயிரிடப்படுகிறது. இங்கு பச்Øகொடி கற்பூரம், முதுகாள் வெள்ளைக்கொடி, முதுகாள் கற்பூரம், மற்றும் கை ரகங்கள் தரம்பிரித்து விற்கப்படுகிறது. இந்நிலையில் புகளூர் மற்றும் சுற்றுப்புறங்களிள் உள்ள முதுகால் ரகங்கள் மற்றும் பச்சைமாறு வெற்றிலை பயிர் அனைத்தும் செவட்டை மற்றும் கல்லிப்பூச்சி நோய் தாக்குதலால் பாதிக்கப்பட்டுள்ளது.நோய் பாதிப்பு காரணமாக வெற்றிலை சிறுத்து சுருண்டும் பழுப்பு நிறமாகி விளைச்சலே வீணாகி போவதால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். இதனால், விவசாய கூலி தொழிலாளர்களும் பணி இழப்பால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

**பிசான சாகுடி பாசனத்திற்கு காரையார் அணை திறப்பு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 12,2010,03:34 IST

விக்கிரமசிங்கபுரம்:பிசான சாகுபடி பாசனத்திற்காக நெல்லை கலெக்டர் ஜெயராமன், நெல்லை எம்பி., ராமசுப்பு ஆகியோர் காரையார் அணையை திறந்து வைத்தனர்.143 அடி கொள்ளளவு கொண்ட நெல்லை மாவட்டத்தின் பிரதான அணையான காரையார் அணையில் தேக்கி வைக்கப்படும் தண்ணீரை பயன்படுத்தி நெல்லை மற்றும் தூத்துக்குடி மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்யப்பட்டு வருகிறது. கார் சாகுபடி முடிந்து பிசான சாகுபடியின் ஆரம்ப கட்ட விவசாய பணிக்காக தமிழக அரசின் உத்தரவின்படி நேற்று காரையார் அணை திறக்கப்பட்டது.கடந்த சுமார் 10 நாட்களுக்கு முன் 50 அடிக்கும் கீழே இருந்த காரையார் அணையின் நீர்மட்டம் சமீபத்தில் பெய்த தொடர் மழை காரணமாக அணையின் நீர்மட்டம் படிப்படியாக தொடர்ந்து அதிகரித்து நேற்று காலை நிலவரப்படி 94.20 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 1519 கனஅடி நீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து 100 கனஅடி நீர் வெளியேறியது.நேற்று சேர்வலார் அணையின் நீர்மட்டம் 120.96 அடியாக இருந்தது. இந்நிலையில் நெல்லை மாவட்டத்தில் பிசான சாகுபடி ஆரம்பகட்ட பணிக்காக நேற்று காரையார் அணையை கலெக்டர் ஜெயராமன், நெல்லை எம்.பி., ராமசுப்பு திறந்து வைத்தனர். தாமிரபரணி அன்னைக்கு மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

அணையை திறந்து வைத்து கலெக்டர் ஜெயராமன் நிருபர்களிடம் கூறியதாவது:- நெல்லை மாவட்டத்தில் பாசனத்திற்கு பயன்படும் பிரதான நதி மற்றும் அணையான காரையார் அணையிலிருந்து பிசான சாகுபடிக்காக தண்ணீர் திறந்து விடப்படுகிறது. கடந்த 8ம் தேதி வந்த அரசு ஆணையின் காரணமாக இன்று (நேற்று) அணை திறக்கப்படுகிறது. நெல்லை மாவட்டத்தில் 40 ஆயிரம் ஏக்கர் தூத்துக்கடி மாவட்டத்தில் 46 ஆயிரத்து 107 ஏக்கரும் சேர்ந்து மொத்தம் 86 ஆயிரத்து 107 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது.பிசான சாகுபடிக்காக அணையிலிருந்து திறந்து விடப்படும் தண்ணீர் வரும் 2011ம் ஆண்டு மார்ச் மாதம் 31ம் தேதி வரை மொத்தம் 5 மாதம் 20 நாட்களுக்கு தண்ணீர் விடப்படும். கடந்த ஆண்டு இதேநாளில் 85 அடியாக இருந்த காரையார் அணையின் நீர்மட்டம் தற்போது 94.20 அடியாக இருக்கிறது. சென்ற ஆண்டு வடகிழக்கு பருவமழை பெய்தது போல் இந்த ஆண்டும் பெய்யும். அணையிலிருந்து திறந்து வைக்கப்படும் தண்ணீரை பயன்படுத்தி விவசாயிகள் செம்மை நெல் சாகுபடி செய்ய வேண்டும்.முதற்கட்டமாக 600 கனஅடி நீர் திறந்து விடப்படுகிறது. பிசான சாகுபடி பாசனத்திற்கு மொத்தம் 14 ஆயிரத்து 351 மில்லியன் கனஅடி நீர் திறக்கப்படும்.

வடக்கு கோடைமேலழகியான், தெற்கு கோடைமேலழகியான் கால்வாய், நதியுன்னி கால்வாய், கன்னடியன் கால்வாயில் ஏற்கனவே தண்ணீர் சென்று கொண்டிருப்பதால் இன்று (நேற்று) அணையிலிருந்து திறந்து விடப்படும் தண்ணீர் நெல்லை கால்வாய், பாளையன் கால்வாய், கோடகன் கால்வாய் ஆகிய மூன்று கால்வாய்களின் மூலம் பாசனத்திற்கு பயன்படும் என்றார்.அணை திறப்பின் போது சேரை., சப்-கலெக்டர் வீரராகவராவ், விக்கிரமசிங்கபுரம் நகராட்சி தலைவர் மாரியப்பன், பாபநாசம் கீழணை செயற்பொறியாளர் சந்தானகுமார், உதவி செயற்பொறிளர்கள் சுடலையாண்டி, பாலசுப்பிரமணி, இளநிலை பொறிளர் சீனிவாசன், பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர்கள் தர்மராஜ், மதனசுதாகரன், முத்துப்பாண்டி, ஸ்ரீவைகுண்டம் தாமிரபரணி திட்டக்குழு தலைவர் உதயசூரியன், நெல்லை மற்றும் தூத்துக்குடி மாவட்ட வேளாண் விற்பனைக்குழு தலைவர் கணேசன், உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**நெல் குருத்துப்பூச்சியை கட்டுப்படுத்தவேளாண் அதிகாரி விளக்கம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 12,2010,03:41 IST

ஆழ்வார்குறிச்சி:நெல் குருத்துப்பூச்சியை கட்டுப்படுத்தும் வழிமுறைகள் குறித்து கடையம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ராஜசேகர் தெரிவித்துள்ளார்.இதுகுறித்து அவர் அறிக்கையில் கூறியிருப்பதாவது:கார்நெல் சாகுபடி செய்துள்ள ஆழ்வார்குறிச்சி, ஆம்பூர், சிவசைலம் போன்ற பகுதிகளில் நெல் பயிர் கதிர் வரும் தருவாயில் உள்ளது. நெல் பயிரில் குருத்துப்பூச்சி தாக்குதல் தற்போது கதிர் வரும் பருவத்தில் உள்ள பயிர்களில் ஒன்று முதல் 2 சதம் வரை பாதிப்பு தென்படுகிறது.

நெல் கதிர் பருவத்தில் குருத்துப்பூச்சி தாக்குதல் 2 சத வெண் கதிர்களுக்கு மேல் இருந்தால் பொருளாதார சேத நிலையாகும்.குருத்துப்பூச்சி தாக்கிய பயிரில் நெல் கதிர்கள் வெண்கதிராக மாறும். அதை கையினால் இழுத்தால் கையில் வந்துவிடும். அதில் குருத்துப்பூச்சி கதிரின் தண்டினை துண்டித்திருப்பது தெரியும்.எனவே இக்குருத்துப்பூச்சி தாக்குதல் மேலும் பரவ வாய்ப்புள்ளதால் விவசாயிகள் புரொப்பெனோபாஸ் 50 சதம் ஏக்கருக்கு 400 மிலி, இன்டாசோகார்ப் 14.50 சதம் ஏக்கருக்கு 80 மிலி, கார்டாப் ஹைட்ரோகுளோரைடு 50 சதம் ஏக்கருக்கு 200 கிராம் என்ற மூன்று மருந்தில் ஏதேனும்

ஒன்றுடன் ஒட்டும் திரவங்களான சாண்டோவிட் அல்லது பைட்டோவிட் அல்லது லிங்காவிட் ஏதேனும் ஒன்றினை ஏக்கருக்கு 100 மிலி வீதம் கலந்து சீராக தெளித்து குருத்துப்பூச்சியினை கட்டப்படுத்தி மகசூல் இழப்பினை தவிர்த்திடுமாறு கடையம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் ராஜசேகர் கேட்டுக் கொண்டுள்ளார்.

2 ஆண்டுக்கு முன் மிளகாய் சாகுபடி செய்த விவசாயிகளுக்கு திடீர் லக்

பதிவு செய்த நாள் : அக்டோபர் 12,2010,02:00 IST

தூத்துக்குடி:ஓட்டப்பிடாரம், விளாத்திகுளம் வட்டாரத்தில் கடந்த ஆண்டிற்கு முந்தைய ஆண்டு மிளகாய் சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு அரசு சார்பில் காப்பீடு தொகை வழங்கப்பட உள்ளது. தொடக்க வேளாண்மை கூட்டுறவு பாங்க்கிற்கு சென்று காப்பீடு தொகையை பெற்றுக் கொள்ளலாம். இது குறித்து தூத்துக்குடி மாவட்ட வேளாண்மைத்துறை சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது; மானாவாரி பயிர் சாகுபடியில் இயற்கை சீற்றத்தினால் ஏற்படும் இழப்பினை ஈடுகட்டுவதற்காக மத்திய, மாநில அரசுகள் வேளாண்மை காப்பீடு நிறுவனத்துடன் இணைந்து தேசிய வேளாண்மை காப்பீடு திட்டம் செயல்படுத்தி வருகிறது. தூத்துக்குடி மாவட்டத்திலும் இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த திட்டத்தின் கீழ் பருத்தி, கம்பு, மக்காச்சோளம், சூரியகாந்தி, உளுந்து, பாசிப்பயிறு, மிளகாய் ஆகிய பயிர்களுக்கு 2008-2009ம் ஆண்டில் கூட்டுறவு பாங்க்குகளின் மூலம் பிரிமியம் வசூல் செய்யப்பட்டது. இதில் ஓட்டப்பிடாரம் மற்றும் விளாத்திகுளம் வட்டாரத்தில் மிளகாய் விளைச்சல் சராசரிக்கும் குறைவாக இருந்தது கண்டறியப்பட்டுள்ளது. இதற்காக 16 லட்சத்து 10 ஆயிரம் ரூபாய் தூத்துக்குடி மாவட்ட கூட்டுறவு பாங்க்கிற்கு வழங்கப்பட்டுள்ளது.தங்களது மிளகாய் பயிரை 2008-2009ம் ஆண்டிற்கு காப்பீடு செய்த ஓட்டப்பிடாரம், விளாத்திகுளம் வட்டார விவசாயிகள் தங்களது தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தை அணுகி காப்பீடு தொகையை பெற்றுக் கொள்ளலாம். இதன் மூலம் 234 விவசாயிகள் பயன் பெறுவர் என்று கலெக்டர் மகேஷ்வரன் தெரிவித்துள்ளார்.

**தோட்டக்கலைத்துறை திட்டங்கள் மாவட்ட அதிகாரி ஆய்வு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 12,2010,02:09 IST

தூத்துக்குடி:புதூர் வட்டாரத்தில் நடைபெற்று வரும் துல்லியப் பண்ணையத்திட்டத்தின் பணி முன்னேற்றம் குறித்து தூத்துக்குடி மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குநர் செய்யது அகம்மது மீனஞ்ஜி ஆய்வு செய்தார்.
ஆய்வின் போது தற்போது 20 ஹெக்டேர் பரப்பளவின் இளவை காய்கறிப் பயிர்களுக்கு சொட்டு நீர்பாசன முறையில் திருந்திய பயிர்சாகுபடி முறைகள் மேற்கொள்ளவிருப்பதையும், இச்சாகுபடி முறையில் முதல் பயிருக்கு உரம், மற்றும்,சிதை மானியத்தில் வழங்கவிருப்பதையும்,விவசாயிகளுக்குஎடுத்துக் கூறினார்.

மாசிலிப்பட்டி கிராமத்தில் ராஜேந்திரன் விவசாயின் தோட்டத்தில் சொட்டு நீர்ப்பாசனம் மூலம் சாகுபடி செய்திருப்பதையும் சாகுபடி முறைகளையும் ஆய்வு செய்தார்.
ஆய்வின்போது சொட்டு நீர்ப்பாசனம் கருவிகளின் தரத்தையும், அமைக்கப்பட்ட பரப்பளவையும் ஆய்வு செய்தார். மேலும் இவ்வட்டாரத்தின் செயல்படுத்தப்படும் ஒருங்கிணைந்த தோட்டக்களை அபிவிருத்தித் திட்டம், மற்றும் உயர் தொழிட் நுட்ப மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் வழங்கப்பெறும் பயன்தரும் மரக்கன்றுகள், காய்கறி விதைகளை விவசாயிகள் மானிய விலையில் பெற்று பயனடையுமாறு கேட்டுக் கொண்டார். இந்த ஆய்வின் போது புதூர் தோட்டக்கலை உதவி இயக்குநர் பழனி வேலாயுதம், துணை தோட்டக்கலை அலுவலர் அருணாச்சலம் ஆகியோர் உடனிருந்தனர்.

**இணைய தளத்தில் விவசாயிகள் விபரம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 11,2010,23:25 IST

ஸ்ரீவில்லிபுத்தூர்:ஸ்ரீவி.,யில் வேளாண் துறை சார்பில் விவசாயிகள் பற்றிய விபரங்கள் இணைய தளத்தில் பதிவு செய்யும் பணி நடந்து வருகிறது.விதைகள், உயிர் உரங்கள், உரங்கள் இருப்பு விபரங்கள் போன்றவைகள் பதிவு செய்யப்பட்டு வருகின்றன.
ஒவ்வொரு விவசாயிக்கும் ஒரு இணையதள பதிவு எண் வழங்கப்படுகிறது.

இனி வரும் காலங்களில் இணைய தளத்தில் விவசாயிகள் தங்களை பதிவு செய்தால் மட்டுமே வேளாண் துறை சார்பில் பெறப்படும் பயன்கள் கிடைக்கும். ஆகையால் விவசாயிகள் தங்களை பற்றிய விபரங்களை வேளாண் விரிவாக்க பணியாளர்களிடம் தெரிவிக்க வேண்டும் என ஸ்ரீவி., உதவி இயக்குனர் முத்து முனியாண்டி தெரிவித்துள்ளார்

**உரக்கடைகளில் அதிகாரிகள் ஆய்வு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 11,2010,23:17 IST

சாத்தூர்:சாத்தூர் தாலுகாவில் உள்ள உரம் மற்றும் பூச்சி மருந்து விற்பனை கடைகளில் மாவட்ட வேளாண் உதவி இயக்குனர் தலைமையில் உதவி இயக்குனர் மூ. பழனிச்செல்வம், வேளாண் அலுவலர் மு.சக் கணேசன் ஆகியோர் ஆய்வு மேற்கொண்டனர்.அனுமதியில்லாத, பதிவு பெறாத உரம் மற்றும் பூச்சி மருந்துகளை விற்கப்படுகிறதா. அரசு நிர்ணயம் செய்த விலையில் உரம் மற்றும் பயிர் வளர்ச்சி ஊக்கிகள், பூச்சி மருந்துகள் மற்றும் பொருட்கள் விற்பனை செய்யப்படுகிறதா. ரசீதுகளில் விற்பனையாளரின் கையெழுத்து உள்ளதா என்று ஆய்வு செய்தனர்.

**இயற்கை வள மேம்பாட்டு திட்டம் வேளாண் இணை இயக்குனர் ஆய்வு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 11,2010,21:38 IST

விழுப்புரம் : வேளாண்மைத் துறை நவப்ரா திட்டத்தில் நடந்து வரும் பணிகளை இணை இயக்குனர் ஆய்வு செய்தார்.

விழுப்புரம் அருகே உள்ள தும்பூர், அதனூர், கஸ்பாகரணை, குண்டலபுலியூர், கஞ்சனூர், சாத்தனூர் கிராமங்களில் வேளாண்மைத் துறை சார் பில் நவப்ரா திட்டத்தின் கீழ் இயற்கை வள மேம் பாட்டுப் பணிகள் நடந்து வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 20 லட்சம் ரூபாய் மதிப்பில் தடுப்பனை கட்டுதல், ஓடை சீரமைத்தல், பண் ணைகுட்டை அமைத்தல்

பணிகளும், 7 லட்சம் ரூபாய் மதிப்பில் பள்ளி சுற்றுசுவர்கள் கட்டும் பணி களும் நடந்து வருகிறது. நீர்வடி முகடு சங்கத்தினர் (பஞ்., தலைவர்கள்) பணிகளை செய்து வருகின்றனர்.

இந்தப் பணிகளை திட்ட அலுவலர் வேளாண் இணை இயக்குனர் ராமகிருஷ்ணன் திடீர் ஆய்வு செய்தார். இயற்கை வள மேம்பாட்டுப் பணிகளை தரமானதாகவும், விரைந்து முடித்திட வேண்டுமென சங்கத் தலைவர்களிடம் அறிவுறுத்தினார். வேளாண் பொறியியல் துறை உதவி பொறியாளர் ராஜசேகரன், இளநிலைப் பொறியாளர் கண்ணன், நீர்வடி மேம்பாட்டுக் குழு தலைவர் நடராஜன் உடனிருந்தனர்.

தினத் தந்தி

## *தொடர் மழை எதிரொலி: ஆலப்புழையில் 528 ஏக்கர் விவசாய பயிர்கள் சேதம்*

*கோழிக்கோடு,அக்.12–*

*ஆலப்புழை மாவட்டத்தில் பெய்த தொடர் மழையால் 528 ஏக்கர் விவசாய பயிர்கள் சேதம் அடைந்து உள்ளன. இதனால் விவசாயிகள் பாதிக்கப்பட்டு உள்ளனர்.*

*தொடர் மழை*

*கேரள மாநிலத்தில் கடந்த மாதம் வெயில் சுள்ளென்று அடித்தது. இதை தொடர்ந்து இந்த மாத தொடக்கத்தில் இருந்தே தென்கேரள பகுதிகளில் பருவ மழை பெய்ய தொடங்கியது. தொடர்மழையின் காரணமாக தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்கியது.*

*குறிப்பாக திருவனந்தபுரம், கொல்லம், பத்தனம்திட்டா, திருச்சூர், இடுக்கி, ஆலப்புழை, எர்ணாகுளம், கோழிக்கோடு ஆகிய மாவட்டங்களில் ஒரு வாரம் காலம் தொடர்ந்து பலத்த மழை பெய்தது. இதனால் அந்தந்த மாவட்டங்களில் உள்ள அணைகளில் நீர்மட்டம் கிடுகிடு என்று உயர்ந்து உள்ளது. ஆறுகளில் வெள்ளம் கரைபுரண்டு ஓடியது.*

விவசாய பயிர்கள் சேதம்

இந்த தொடர் மழைக்கு இதுவரை 7 பேர் பலியாகி இருக்கிறார்கள். இதில் திருவனந்தபுரத்தில் 5 பேரும், திருச்சூரில் 2 பேரும் பலியானது குறிப்பிடத்தக்கது. 328 வீடுகள் சேதம் அடைந்து உள்ளன.ஆலப்புழை மாவட்டத்தில் கடந்த ஒரு வாரம் காலம் தொடர்ந்து பலத்த மழை பெய்தது. இதனால் வெளிமாநிலங்கள், வெளிநாட்டில் இருந்து வரும் சுற்றுலா பயணிகளின் வருகை மிகவும் குறைவாக காணப்பட்டது. அதோடு ஆலப்புழை மாவட்டத்தில் சுமார் 528 ஏக்கர் விவசாய பயிர்கள் மழையினால் அழுகி நாசம் அடைந்து உள்ளது. இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டு உள்ளனர். இந்த பருவமழையினால் ரூ.1 கோடி நஷ்டம் ஏற்பட்டு இருப்பதாக அரசு கணக்கீட்டு உள்ளது.

மழை சேதத்திற்கு 3 கோடி ரூபாய் நிவாரண தொகை வழங்க கோரி மத்திய அரசிடம் கேரள அரசு வேண்டுகோள் விடுத்து உள்ளது. ஆலப்புழை மாவட்டத்தில் 28 ஆயிரத்து 569 பேருக்கு நிவாரண உதவிகள் வழங்கப்பட்டது.

# பூத்துக்குலுங்கும் செண்டு பூக்கள்



கோவை–சிறுவாணி செல்லும் மெயின்ரோட்டில் சென்னனூர் தண்ணீர்பந்தல் அருகே உள்ள தோட்டங்களில் செண்டு பூக்கள் பூத்துக்குலுங்குகின்றன. நவராத்திரி நெருங்குவதையொட்டி பூக்கள் விற்பனை அமோகமாக இருக்கிறது. இதனால் 2 பெண்கள் செண்டு பூக்களை ஆர்வத்துடன் பறிப்பதை படத்தில் காணலாம்.

## *குன்னூர் ஏல மையத்தில் 18 சதவீத தேயிலை தூள் தேக்கம்*

*குன்னூர், அக்.12–*

*குன்னூர் ஏல மையத்தில் 18 சதவீத தேயிலை தூள் தேக்கம் அடைந்தது.*

*தேயிலை ஏலம்*

*குன்னூரில் வாரந்தோறும் வியாழன், வெள்ளி ஆகிய 2 நாட்கள் தேயிலை வர்த்தகர் அமைப்பின் மூலம் தேயிலை ஏலம் நடத்தப்படுகிறது. இந்த ஏலத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்கள் கலந்து கொள்கிறார்கள்.*

*விற்பனை எண் 40–க்கான தேயிலை ஏலம் கடந்த 7, 8 ஆகிய தேதிகளில் நடைபெற்று*

வருகிறது. ஏலத்துக்கு மொத்தம் 12 லட்சத்து 88 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வந்தது. இதில் 8 லட்சத்து 66 ஆயிரம் கிலோ இலை ரகமாகவும், 4 லட்சத்து 22 ஆயிரம் கிலோ டஸ்ட் ரகமாகவும் இருந்தது.

ஆர்வம் இல்லை

ஏலத்தில் உள்நாட்டு வர்த்தகமும், வெளி நாட்டு வர்த்தகமும் களைகட்டா மல் இருந்தது. உள்நாட்டு வர்த்த கர்கள் இடையே விலையை அதிகரிக்கக்கூடிய ஆர்வம் இல்லாமல் இருந்தது.

பாகிஸ்தான் மற்றும் ரஷ்ய நாட்டு வர்த்தகர்கள் குறை வான அளவு தேயிலை தூளையே வாங்கினார்கள். வட இந்திய தேயிலை தூளையும் வர்த்தகர்கள் ஏலம் எடுப்பதால், தென்னியந்திய தேயிலை தூளுக்கு கிராக்கி ஏற்படுவது இல்லை என்று தேயிலை மையத்தினர் கூறுகின்றனர்.

18 சதவீதம் தேக்கம்

விற்பனை எண் 40–க்கான ஏலத்தில் வியாபாரிகளிடையே ஏலம் எடுக்கும் ஆர்வம் குறைந்து இருந்ததால், தேயிலை தூளின் விலையில் நிலையற்ற தன்மை இருந்தது. இதனால் 18 சதவீத தூள் விற்பனையாகாமல் தேக்கம் அடைந்தது. சி.டி.சி. தேயிலை தூளின் உயர்ந்தபட்ச விலையாக ரூ.131 இருந்தது. 65 தேயிலை தொழிற்சாலைகள் ரூ.100க்கு தங்களது தேயிலை தூளை விற்பனை செய்தன.

ஆர்தோடக்ஸ் தேயிலை தூளுக்கு ரூ.205 உயர்ந்தபட்ச விலையாக இருந்தது. 30 தொழிற்சாலை கள் தங்களது தேயிலை தூளை ரூ.100க்கு விற்பனை செய்தன. சராசரி விலையாக இலை ரகத்தின் சாதாரண வகை ரூ.40–ல் இருந்து ரூ.42 வரையிலும் உயர்ரக தேயிலை தூள் ரூ.90–ல் இருந்து ரூ.130 வரை ஏலம் சென்றது.

டஸ்ட் ரகத்தின் சாதாரண வகை ரூ.45–ல் இருந்து ரூ.52 வரையிலும், உயர்விலை தேயிலை தூள் ரூ.80–ல் இருந்து ரூ.115–வரை ஏலம் சென்றது.

அடுத்த ஏலம்

விற்பனை எண் 41–க்கான ஏலம் வருகிற 14, 15 ஆகிய தேதிகளில் நடைபெறுகிறது. ஏலத்துக்கு 12 லட்சத்து 39 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வருகிறது.

## 5 லட்சம் மரக்கன்றுகள் நடுதல் குறித்த விழிப்புணர்வு முகாம்

**திண்டுக்கல்,** *அக்.12*

**திண்டுக்கல் மாவட்டத்தில் 5 லட்சம் மரக்கன்றுகள் நடுதல் குறித்த விழிப்புணர்வு.....**

**மற்றும் பயிற்சி முகாம் புனித மரியன்னை மேல்நிலைப்பள்ளியில் துவக்கி வைக்கப்பட்டது.**

**இப்பயிற்சியில் திட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் உதவி இயக்குனர் மனோகரன் வரவேற்புரையாற்றி பேசுகையில், மரக்கன்றுகள் நடும் பணியை கல்வித்துறையைச் சேர்ந்த அனைத்து பள்ளிகளும் முழுமையாக ஈடுபடுத்தி 3 லட்சம் மரக்கன்றுகள் பள்ளிகள் மூலமாக நடப்படுவதாக தெரிவித்தார். இப்பயிற்சியில் திண்டுக்கல் வேளாண் இணை இயக்குனர் கணேசன், மாவட்ட வன அலுவலர் தங்கராஜ், முதன்மைக் கல்வி அலுவலர், மாவட்ட கல்வி அலுவலர்கள், மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர், மெட்ரிக் பள்ளி ஆய்வாளர், அனைத்து உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள், மெட்ரிக் பள்ளி முதல்வர்கள், பசுமைப்படை ஒருங்கிணைப்பாளர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.**

திருவாரூரில் ராஜராஜன் 1000 நெல் சாகுபடி வயலை கருணாநிதி ஆய்வு செய்தார்

திருவாரூர், அக். 11-

திருவாரூரில் ராஜராஜன் 1000 நெல் சாகுபடி வயலை முதல்-அமைச்சர் கருணாநிதி நேற்று நேரில் ஆய்வு செய்தார்.



திருவாரூரில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக முதல்-அமைச்சர் கருணாநிதி சென்னையில் இருந்து காரில் புறப்பட்டு புதுச்சேரி, கடலூர், சிதம்பரம் வழியாக நேற்று திருவாரூர் மாவட்டத்திற்கு வந்தார். திருவாரூர் மாவட்ட எல்லையான குமாரமங்கலத்தில் அவருக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து அங்கிருந்து புறப்பட்டு பேரளம், பூந்தோட்டம் வழியாக கோவில் திருமாளம் சென்றார். அங்கு தயாளு அம்மாளின் அண்ணன் திருவாரூர் மாவட்ட வேளாண்மை விற்பனைக் குழுத்தலைவர் கோ.தெட்சிணாமூர்த்தியின் மனைவி தனம் அம்மாள் படத்திறப்பு விழாவில் கலந்து கொண்டார்.

முன்னதாக கோவில் திருமாளத்தில் உள்ள ஒரு வயலில் ராஜராஜன் 1000 நெல் சாகுபடி நடைபெற்றுக் கொண்டிருந்தது. இதனை பார்த்த முதல்-அமைச்சர் கருணாநிதி காரை நிறுத்தி சாகுபடி செய்யப்பட்ட வயலை பார்வையிட்டார். ராஜராஜன் வயல் சாகுபடியின் பலன் பற்றி கேட்டறிந்தார். அப்போது கலெக்டர் எம்.சந்திரசேகரன், "இந்த சாகுபடி முறையால் விதை, உரம், தண்ர், செலவு மிகவும் குறைவு. இதனால் 30 சதவீதம் சாகுபடி செலவு குறைகின்றது. 40 சதவீதம் அதிக மகசூலும் கிடைக்கும். சி.ஆர்.1009 ரக நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இது 155 நாள் சாகுபடியாகும்" என்று கூறினார்.

பின்னர், "இது யாருடைய நிலம்?" என்று முதல்-அமைச்சர் கேட்டார். அங்கிருந்த விவசாயி வரதராஜன், "தன்னுடைய நிலம்" என்றார். "எத்தனை ஏக்கர் சாகுபடி

செய்யப்பட்டு உள்ளது" என்று கேட்டதற்கு, "10 ஏக்கர் பரப்பில் முழுமையாக ராஜராஜன் 1000 நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது" என்று தெரிவித்தார். இது எத்தனை நாள் பயிர் என்று முதல்-அமைச்சர் கேட்டதற்கு, "40 நாட்கள்" என்று விவசாயி வரதராஜன் பதில் அளித்தார். மேலும், அரசு விதை, உரம், கடன் வசதி செய்து தந்துள்ளதால் விவசாயிகள் முழுமையாக சாகுபடி பணி செய்து வருகிறோம். அதற்கு நன்றியை தெரிவித்துக்கொள்வதாகவும் அவர் கூறினார்.

இறுதியாக முதல்-அமைச்சர் கருணாநிதி, அங்கு காரை சுற்றி நின்று கொண்டிருந்தவர்களை சற்று நகரச்சொல்லி, வயலில் இருந்த "ராஜராஜன் 1000" என்ற பலகையை பார்த்தார். அதில் "இ" சேர்த்து "இராஜராஜன் 1000" என்று திருத்தம் செய்ய வேண்டும் என்று கூறிவிட்டு புறப்பட்டார்.